பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 மாசி 4 ரபி அவ் 7 இதழ் 6
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 16-2-78

லாலா
சோப்
பிரகாச சலவை!
பளிச்சிடும் வெண்மை!
ஈழம் எங்கும் கிடைக்கும்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

## இவர்களுக்கு அரிசி

[கொழும்பு]

கூப்பன் புத்தகங்களை ஒப்படைப்பது தொடர்பாக மறுபரிசீலனை செய்யும்படி மனுச் செய்திருப்பவர்களின் மனுக்கள் மீதான பரிசீலனை முடிவடையும் வரை அவர்கள் ஒரு மாத காலத்திற்குத் தமது பங்கீட்டு அரிசியைப் பெற்றுக் கொள்ளலாமென்று மந்திரி சபை முடிவுசெய்துள்ளது.

# மாவனல்லை கதிரேசன்கோவிலை

# குண்டர் தரைமட்டமாக்கினர்

## பாதுகாப்புகேட்ட தமிழர்களுக்கே முதலில் அடி!

### சன்சோனி கமிஷன்முன் அர்ச்சகர் தியாகராசசர்மா சாட்சியம்

— கா. யோகநாதன் —

[யாழ்ப்பாணம்]

**ஆகஸ்ட் கலவரத்தின்போது மாவனல்ல ஸ்ரீகதிரேசன் கோவிலை குண்டர்கள் அடித்துநொறுக்கி தரைமட்டமாக்கினர்களென்று சன்சோனி கமிஷன்முன் சாட்சியமளித்த கோவில் அர்ச்சகர் குமாரசாமிஐயர் தியாகராச சர்மா கூறினர்.**

வரக்காப்பொல முத்துமாரிஅம்மன்கோவில், கேகாலை கதிரேசன்கோவில், பேராதனை வளாககோவில், பொல்காவலை கதிரேசன்கோவில்களையும் குண்டர்கள் சேதப்படுத்தியதாகவும் அவர் கூறினர்.

இந்துக்கோவில்களை அடித்து உடைத்து எல்லாவற்றையும் பௌத்த விகாரைகளாக்கவேண்டும் என குண்டர்கள் கூறியதாகவும் தியாகராசசர்மாகூறினர். யாழ்ப்பாணத்தில் புத்த பிக்குகளை தமிழர்கள் தாக்குவதால், தமிழ் அர்ச்சகர்களை இங்கு இருக்கவிடக்கூடாதென் குண்டர்கள் கூறியதாகவும்அவர் கூறினர். குண்டர்கள், தமிழ்க்கடைகளை தாக்கிக் கொள்ளையடித்தபோது, அதனைப் பார்த்துக்கொண்டிருந்த மாவனல்ல பொலிஸார் 'அடியுங்கள், அடியுங்கள்'என்று உற்சாகப்படுத்தினர்கள் என்றும் தியாகராச சர்மா கூறினர்.

பாதுகாப்புக்கோரி பொலிசாரிடம் பட்டியல் கொடுத்த இந்துக்களுக்கே, மாவனல்லையில் முதலில் அடிவிழுந்ததாகவும் அவர் கூறினர்.

இந்துஇளைஞர்பேரவை சார்பில் தியாகராசாசர்மா தமிழில் சாட்சியமளித்தார். இவர் சார்பில் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் ஆஜரானர்.

தியாகராசாசர்மா சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:-

'நான் 65ம் ஆண்டுமுதல் மாவனல்ல கதிரேசன்கோவில் பிரதம அர்ச்சகராக இருந்தேன். அதற்குமுன் வேறுபேர் இருந்தார்கள்.

மாவனவல்லையில், தோட்ட தொழிலாளர் உட்பட சுமார் 5,000 இந்துக்கள் வாழ்கின்றனர்.

கதிரேசன் கோவிலில் மற்ற சமயத்தவர்களும் வந்து வணங்குவதுண்டு. அங்கு பெரும்பாலானபௌத்தர்களே வந்து வணங்குவார்கள்.

அக்கோவில் 69-ம் ஆண்டு விசேடமாக கட்டி கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது. இதற்கு ஒரு லட்சம் ரூபா செலவானது.

நான் திருமணம் முடிந்து கோவிலுக்கருகில் குடும்பத்துடன் வாழ்ந்துவந்தேன். தினமும் பூசையும், உற்சவங்களும் நடைபெறும்.

58-ம் ஆண்டு இனக்கலவரம் நடந்தபோது கோவிலுக்கு பாதிப்பில்லையென அறிந்தேன். நான் அப்போது அங்கு இருக்கவில்லை.

### கம்பு, பொல்லுடன் வந்தனர்

ஆகஸ்ட் 19-ம் தேதி பகல் 12 மணிக்கு நான் மட்டும் கோவிலில் இருந்தேன். என் மனைவி அச்சமயம் ஊரில் இருந்தார் அப்போது ஒரு கோஷ்டியினர் என்னை அடிக்க கம்புகள், இரும்புகொண்டு வந்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் 'ஹாமுத்துறுவை' தாக்குகிருர்கள் உங்களை இங்கு இருக்கவிடக் கூடாது என்று அவர்கள் கூறினர்கள்.

கோவிலை, அடித்து நொறுக்கினர்கள். இந்துக்கோவிலை விகாரைகளாக்க வேண்டும் என்று கூறினர்கள். நான் அங்கிருந்து ஓடிவிட்டேன். சிலைகளுக்கு தீயிட்டார்கள். விக்கிரகங்களை நொறுக்கினர்கள்.

புனிதத் தன்மை வாய்ந்த கர்ப்பகிரகத்தையும் விக்கிரகங்களையும் உடைத்தார்கள்.

கோவிலுக்குரிய கடைகளை தீயிட்டுக் கொளுத்தினர்கள். மடத்திற்குள் சென்று எல்லாவற்றையும் அடித்தார்கள்.

### மூலஸ்தானத்தில் காடையர்

கோவில் மூலஸ்தானத்திற்குள் ஐயர் மட்டுமே செல்ல முடியும். பக்தரான இந்துகூட மூலஸ்தானத்திற்குள் செல்ல அனுமதிக்கமாட்டோம். அப்படியான புனிதத்தன்மை மூலஸ்தானத்திற்குள் காடையர்கள் சென்றுஅடித்து விக்கிரகங்களையெல்லாம் கொண்டு சென்றுவிட்டனர்.

மூலஸ்தானத்தில் வேல் ஒன்று இருந்தது 'கதிர்காம தெய்யோ' என அதனை பௌத்தர்கள் அழைத்து வணங்குவார்கள்.

கமிஷனர்: மூலஸ்தானத்தை அழித்துவிட்டார்களா?- ஆம். தேங்காய் உடைக்கும் கற்பூரம் கொளுத்தும் சகலஇடங்களும் தரைமட்டமாகின.

மாவனல்லை எம். பி. அடித்து நொருக்கப்பட்ட விக்கிரகங்களை வீட்டில் பாதுகாப்பாக வைத்திருக்கிருர்.

தெய்வத்தை உயிருள்ள மனிதரில் மட்டுமல்ல உயிரில்லாத பொருட்களிலும் ஒரு மனிதன் காணலாம்.

கோவிலுக்கு சுமார் 1 லட்சம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எனது பொருட்கள் 15,000 ரூபா நஷ்டம் ஏற்பட்டது.

## குண்டர்களுக்கு பொலிசார் உற்சாகமூட்டினர்

சட்டத்தரணி: 16-ம் திகதி நாட்டில் கலவரம் தொடங்கியது தெரியுமா?-ஆம். பொலிஸ் பாதுகாப்பு தேவையென, மாவனல்லையில் உள்ள பிரதான இந்துக்கள், பெயர், விலாசங்களை பொலிசாருக்கு எழுதிக்கொடுத்தோம். கலவரம் ஆரம்பித்ததும் முதல் தாக்கப்பட்டது. பெயர் எழுதி பாதுகாப்புக் கேட்டவர்கள் தான்.

சட்: முதலாவது அடி விழுந்தது பொலிஸ் பாதுகாப்புக் கேட்டவர்களுக்குத்தான்.

சட்: முதலாவது அடி விழுந்தது. பொலிஸ் பாதுகாப்புக் கேட்டவர்களுக் குத் தான்?- ஆம். பொலிஸார் ரோட்டில் ரோந்து சுற்றிக் கொண்டிருந்தார்கள். குண்டர்கள் தமிழர் கடைகளைக் கொள்ளையடித்தபோது 'காப்பாங் காப்பாங்' (அடியுங்கள், அடியுங்கள் என்று சிங்களத்தில் கூறி உற்சாகப்படுத்தினர்கள்.

நான் தோட்டப் பக்கத்தில்

[6-ம் பக்கம் பார்க்க]

## சமாதியானர்



[யாழ்ப்பாணம்]

நீண்ட காலமாக, மக்களுக்குப் பெருயோகப் பெறுபேற்றை வழங்கிய கந்தையா சுவாமிகள் (குடைச்சாமி) நேற்று முன்தினம் சமாதி அடைந்தார். சுவாமிஜியின் சமாதிக் கிரியைகள் இன்று நடைபெறுகின்றன. [கெ]

### சைக்கிள்களுக்கு மேலாக

## பஸ்ஸை 'விடடா'என்று ஐ. பி. வால்டர் பெரேரா கூறினர்

—சாரதி சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

பொலிசார் வீதியில் சயிக்கிளை போட்டுவிட்டு அதற்கு மேலால் பஸ்ஸை செலுத்தும்படி கூறினர். அங்கு துப்பாக்கியுடன் நின்ற இன்ஸ்பெக்டர் வால்டர் பெரேரா என்னிடம் "விடடா பஸ்ஸை" என்று கூறினர்.

சான்சோனி கமிஷன்முன் சாட்சியமளித்த இ. போ. ச. சாரதி வேலுப்பிள்ளை நாகமணி மேற்கண்டவாறு கூறினர்.

திரு. நாகமணி கூறியதாவது: 54-ம் ஆண்டு நான் சாரதியாக சேர்ந்தேன். ஆகஸ்ட் 16-ம் தேதி கோண்டாவில் பஸ் டிப்போவிலிருந்து பஸ் நிலையத்திற்கு வந்தேன். யாழ்ப்பாணம் ரயில்வே கடவையை கடந்துசென்றபோது பொலிசார் என்னை மறித்தார்கள். அவர்கள் யூனிபோம் அணிந்திருந்தார்கள். நம்பர் இல்லை.

சயிக்கிளை தூக்கி ரோட்டில் போட்டார்கள். அதற்கு மேலால் பஸ்ஸை ஓட்டுமாறு கூறினர்கள். 2சயிக்கிள்போடப் பட்டிருந்தது. பொலிசாரைக் கண்டதும் ரோட்டுக்கருகில் நின்றவர்கள் சயிக்கிளை போட்டு ஓடினர்கள். அந்த சயிக்கிள்களைத்தான் பொலிசார் எடுத்து வீதியில் போட்டார்கள்.

நான் பஸ்ஸை செலுத்த மறுத்தேன். ஒரு பொலிஸ்காரர் றைபிளை நீட்டி ஓட்டுமாறு ஜீப்பிலிருந்துகொண்டு கூறினர். முன்னுக்கு நின்ற பொலிஸ் 'வாடா' என்ருர். பின்னுக்கு நின்ற 'பொலிஸ் போடா' என்ருர். அவர்களுடன் இன்ஸ்பெக்டர் வால்டர்

[5-ம் பக்கம் பார்க்க]

## செம்மணி கொலைவழக்கு விசாரணை

(வவனியா)

செம்மணி பொலிஸ் துப்பாக்கிச் சூட்டுக் கொலை தொடர்பான மனு விசாரணை நேற்று யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜனுப் எம். எம் அப்துல்காதர் முன்னிலையில் ஆரம்பமானது. இவ்வழக்கில் எதிரியான கான்ஸ்டபிள்-ஸ்டான்லி நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

அரச தரப்பு வழக்கறிஞர்கள் வருகை தராமையால் விசாரணையை நீதிபதி இன்று வரை ஒத்திவைத்தார்

## வி. பி.யின் விளக்கம்

மாஸ்கோ சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட திரு. வி. பொன்னம்பலம் தமது நிலை குறித்து வெளியிட்டுள்ள அறிக்கைநாளைய 'ஈழநாடு' இதழில் விபரமாக வெளிவருகிறது. —ஆ-ரி

மத்திய நாடுகளிலும் மேற்கு ஆசியாவிலும்

## வேலை வாய்ப்பு

விபரங்களுக்கு:

**MAN PER**

யாழ் கிளை
144, அம்மன் ரோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தலைமைக் காரியாலயம்
MAN PER
1-ம் மாடி போலின் கட்டிடம்,
54, காலி வீதி,
தெகிவளை.

8520


## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

28/1, காமல் வீதி, யாழ்ப்பாணம்.
1. கொன்ஸ்ரன்ரைன் ஜோசப்நாயகம்
2. பெண் மேரியம்மா

வழக்காளிகள்

இல. ஈடு 13159

எதிராக

22 இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம்
1. பரிமளம் ஹியூபேட் விலியஸ்ரோன் துரைநாயகம்
2. பெண் ஸ்கொலேஉஷியா

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு 13159-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப் படி பின்னால் விபரிக்கப்பட்டுள்ள ஒரு துண்டுக் காணியை 1978-ம் வருஷம் பங்குனி மாதம் 1-ந் திகதி (1-3-78) முற் பகல் 10-00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூ. 8650/- இன்னும் ரூ. 5000/-க்கு 5-6-72 தொடக்கம் 26-12-75 வரைக்கும் 12 வீத வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூ 809-49 சதம் இதில் தீர்வையில் ரூ. 1000/-மும் செலவால் ரூ 300/ ம் கொடுபட்டுள்ளது.

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளி கோவிற்பற்று கரையூரிறை ''பறையன் மணற்காடு'' 14, 12/100 பேர்ச்சஸ் இதில் வடக்குப் பக்கமாக அரைவாசிக்கு நிந்தமாக 7 12/100 பேர்ச்சஸ் கல்வீடும் கிணறும் அதற்குரியவைகளும் இந்த 7 12/100 பேர்ச்சஸுக்கு எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு ஒழுங்கை, மேற்கு டேவிட் வீதி, தெற்கு அன்னா ரோசம்மா சரோஜினிதேவியினுதனம் இதடங்கலில் சொரியலாய் 2/3 மூன்றில் இரண்டு பங்கும் குறித்த ஆதனத்திற்குரியவற்றில் இதற்குரிய சரிசம அளவும் ஆனால் குறித்த வடக்குப்பக்க அரைவாசிக்குள் இருக்கும் கிணற்றில் தெற்கெல்லைக் காணிச் சொந்தக்காரர் தண்ணீர் அள்ளும் உரித்தும் புறநீங்கல் பதிவு யாழ்ப்பாணம் டி 171/326.

**செ. விசாகரெத்தினம்,**
விற்பனவு ஆணையாளர்,

133, பருத்தித்துறை ரோட்டு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்,
26-1-78.

8518

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

ஆறுகால்மடத்தடி ஆனைக்கோட்டை
சிதம்பரப்பிள்ளை நித்தியலக்சுமி

வழக்காளி

இல. ஈடு 15096

எதிராக

கலட்டி அம்மன் கோவிலடி வண்ணார்பண்ணை
கிழக்கு, யாழ்ப்பாணம்
இளையதம்பி சரவணமுத்து.

எதிராளி

யாழ்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு 15096-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1978 ம் வருஷம் பங்குனி மாதம் 2 ந் திகதி (2-3-78) முற்பகல் 10-00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூ. 7000/- இன்னும் ரூபா 5000/-க்கு 5-11-75 தொடக்கம் 30-9-76 வரைக்கும் 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கப்படும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூ 518-15 சதம்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடக்கிறை ''சாவான்கோட்டை'' பர. நில. இலா. 2 குளி 1 5/10. இது 1959-ம் வருஷம் ஆனி மாதம் 27-ந் திகதி உலாந்தா எஸ் ஏகாம்பரத்தால் தயாரிக்கப்பட்ட 701-ம் இலக்கப் படத்தில் 2ம் துண்டு இந்தப் பரப்பு இரண்டு குளி ஒன்றுடன் பத்தில் ஐந்தும் இதற்குள் அடங்கிய கல்வீடு அரைவாசியும் வடக்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் எல்லை கிழக்கு குணரெத்தினம் கைம்பெண் சொர்ணம்மாவினுதனம், வடக்கு மகாதேவா பெண் புவனேஸ்வரியினுதனம், மேற்கு சினியர் ஒழுங்கை, தெற்கு அம்மன்கோவில் வீதி இதடங்லுகம் (பதிவு டி 309/207,374/1)

**செ. விசாகரெத்தினம்,**
விற்பனவு ஆணையாளர்.

133, பருத்தித்துறை ரோட்டு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்,
15-1-78.

8517

# காரைநகருக்கு மின்தறி ஆலை

## ப.நோ.கூ. சங்கக் கூட்டத்தில் வட்டு. எம். பி. உரை

[வட்டுக்கோட்டை]

''பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எந்த இலட்சியத்தை அடிப்படையாக வைத்து ஆரம்பிக்கப்பட்டனவோ அதை மறந்து லாபம் சம்பாதிக்க வேண்டுமென்ற ஒரே நோக்குடனேயே பல கூட்டுறவுச் சங்கங்களும் சென்ற சில காலமாக இயங்கி வந்துள்ளன'' என்று வட்டுக்கோட்டை தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் புதிய இயக்குநர் சபைக் கூட்டத்தை சங்கக் காரியாலயத்தில் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் தெரிவித்தார். அவர் மேலும் பேசியதாவது: பஸ்சேவை தனியார் துறையால் நடாத்தப்பட்டு வந்தபோது இலாபத்தில் ஓடியதெனவும் ஆனால் இலங்கைப்போக்குவரத்துச் சபை இதைக் கையேற்றதை யடுத்து நட்டத்தில் இயங்குவதாகவும் இதற்குக்காரணம் என்ன என்று ஆட்சி மன்றத்தில் ஒருமுறை கேட்கப்பட்டது. பொறுப்பான மந்திரி இதற்குப் பதிலளிக்கையில் தனியார் துறையினர் எந்தவழியில் சென்றால் தாம் கூடியளவு பணத்தைச் சம்பாதிக்கலாமோ அந்தவழியாலேயே தமது பஸ்களை சேவையிலீடுபடுத்தினர் என்றும் ஆனால் இலங்கைப் போக்குவரத்துச் சபை அவ்வாறில்லாது மக்களின் சேவையையே நோக்கமாகக் கொண்டு சகல பாதைகளிலும் சேவை ஆற்றுவதே இதற்குக் காரணம் என்றும் கூறியிருந்தார். பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களும் மக்களின் சேவை ஒன்றையே அடிப்படையாக வைத்து ஆரம்பிக்கப்பட்டன. இந்த அடிப்படை இலட்சியத்தை மனதில் கொண்டு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஊழியர்களும் இயக்குநர் சபை உறுப்பினர்களும் பணியாற்றி சாதாரண மக்கள் தங்கள் அன்றுடப் பொருட்களை இலகுவாகவும் மலிவாகவும் பெறுவதற்கு வழிசெய்ய வேண்டும். இதில் ஏதாவது கஷ்டங்கள் இருக்குமானால் அவற்றை எனது கவனத்திற்குக் கொண்டுவந்தால் தக்க நடவடிக்கை

### காரைநகருக்கு மின்தறி ஆலை

எனது தொகுதியில் உள்ள மூன்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் சங்கானை, பண்டத்தரிப்பு ஆகிய இரு சங்கங்களிலும் மின்தறி ஆரம்பிக்கப்பட்டு பலர் இதில் வேலைவாய்ப்பும் பெற்றுள்ளனர். காரைநகரிலும் இது போன்ற ஒரு மின்தறி நிலையத்தை ஆரம்பித்து வைத்து இதன்மூலம் இப்பகுதியிலுள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்க எண்ணியுள்ளேன். இதற்குச் சகலரும் ஒத்துழைக்கவேண்டும். காரைநகர், பண்டத்தரிப்பு ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் நடந்ததாகக் கூறப்படும் ஊழல்கள் பற்றிய விசாரணைகள் முடிவடைந்து அறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவே இவ்விரு சங்கங்களும் இதுவரை இருந்துவந்த அரசாங்க நிர்வாகத்தை மாற்றிப் பொதுமக்களின் நிர்வாகத்தின்கீழ் கொண்டு வந்துள்ளேன். ஆனால் சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஊழியர்கள் பற்றிய விசாரணைகள் இன்னும் முடிவடையாததால் தொடர்ந்தும் அரசாங்க நிர்வாகத்திலேயே இருக்குமாறு சிபாரிசு செய்துள்ளேன்.''

இயக்குநர்சபை உறுப்பினருள் ஒருவரான திரு. க. சிவமணி பேசுகையில், ''கடந்த ஒருவருட காலமாக காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் எவ்வகையில் இயங்கி வந்தது என்பதைப் பலரும் அறிவர். முன்னர் தனிப்பட்ட ஒருவரின் அதிகாரத்தின்கீழ் மக்கள் மாத்திரமல்லாது, சங்க ஊழியர்கள் கூட எதை

(5-ம் பக்கம் பார்க்க)


## வரி விளம்பரம்

### தேவை

தேவன்ஸ் சீயாக்காய்பவுடர் மற்றும் தயாரிப்புகள் தயார் செய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை. தேவன்மில், 67, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
8513

சீமேந்து வெற்று (B) பாக்குகள் தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். 8522

எமது ஸ்தாபனத்திற்கு மனேஜர், காசாளர் உடனடியாக தேவை பிணைப்பணம் கட்டக்கூடியவர்கள் மத்திரம்விண்ணப்பிக்கவும். நியூ ஒஹோ இன்டஸ்றீஸ்,12, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 8521

ஆங்கில அறிவும் இசை யார்வமும் உள்ள மனேச்சர் ஒருவர் உடனடியாக தேவை. விபரங்களுக்கு: பரமேஸ் கோணேஸ் புரடக்ஷன்ஸ், 9, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 8509

### வகுப்புக்கள்

யாழ்ப்பாண தொழில்நுட்ப பாடசாலை (3580)யின் ஆதரவில் மின்நுட்ப தொழில் தராதரம் எலக்ரோ ரெக்னிசியன் டிப்புளோமா வகுப்பு வியாழன், வெள்ளி, சனி நாட்களில் இரவு 8 மணிக்கு நடைபெறுகின்றது. விபரங்கள்: மின் போதனாசிரியர், 'பூம்புகார்', (அண்ணா கல்வி நிலையம்), யாழ்ப்பாண வீதி, காங்கேசன்துறை. 8519


ஆசிரியருக்குக்கடிதம்:

# சுதந்திர வர்த்தகவலயம்

1976ம் ஆண்டுப் பொதுத் தேர்தல் கூட்டங்களில் அரசியல் கட்சிகளினால் மக்கள் முன் வைக்கப்பட்ட அரசியல் விஞ்ஞாபனங்களில் சுதந்திர வர்த்தக வலயம் என்னும் சொல் அடிபட்டதை நாம் அறிவோம். இதைப் பற்றி பலராலும் பலமாதிரியாகப் பேசப்பட்டது.

இது இலங்கைக்குப் புதிதாக இருக்கலாம் ஆனால் ஏனைய சில நாடுகளைப் பொறுத்த வரையில் இது புதிய தொன்றல்ல. இன்று உலகில் 40 சுதந்திர வலயங்கள் காணப்படுகின்றன ஐரோப்பாவிலும், மத்திய கிழக்கிலும் அரபு நாடுகள், எகிப்துக் குடியரசு போன்று ஏனைய நாடுகளிலும் காணப்படுகின்றன. ஆனால் எல்லா நாடுகளிலும் இது வெற்றியளித்து, இதில் முதல் இட்டோர் நன்மை அடைந்தார்கள் என்று கூறமுடியாது இந்தியாவிலும், பிலிப்பைன்சிலும் இன்று ஆரம்பிக்கப் பட்ட காலம் தொட்டு வெற்றியளிக்கவில்லை. இதற்குக் காரணம் இன்று திறமையாக இயங்காததே. இவை வளர்ச்சியடைய வேண்டுமாயின் சில அடிப்படைச் சூழ்நிலைகள் நன்குயமையவேண்டும்.

அரசியல் ஸ்திரம்- இதில் முக்கியமான தொன்று இவ்வலயங்களில் முதலீடு செய்கின்ற அன்னிய முதலீட்டாளர்கள் அரசியல் ஸ்திரம் பற்றி நன்கு கவனிப்பார்கள். இவ்வலயங்களில் பெரிதும் வெளிநாட்டவரே முதலீடு செய்வார்கள் தாம் செய்யும் முதலீட்டில் இருந்து அதிக சிரமம் இன்றித் தமது முதலீடுகளுக்குப் பங்கம் ஏற்படாத வகையில் இலாபம் பெறக்கூடிய நிலைமை இருந்தால் தான், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இவ்வலயங்களில் முதலீடு செய்ய வருவர். நாட்டில் அடிக்கடி அரசாங்கங்கள் மாற்றம் அடைவதன் பலனாக அரசியல் கொள்கைகளில் அடிக்கடி பெரிய மாற்றங்கள் நிகழக்கூடிய சூழ்நிலைகள் இருக்கின்றபோதோ, அல்லது புரட்சிகள் நடக்கக் கூடிய சூழ்நிலைகள் இருக்கின்ற போதே, குறிப்பிட்ட நாட்டில் முதலீடு செய்வதற்கு முயற்சியாளர் தயங்குவர். எனவே, தமது முதலீட்டுக்குப் பாதிப்பு ஏற்படக் கூடும் என்ற பயம் இல்லாமல் செய்வதற்கு நாட்டில் ஸ்திரம் இருக்கவேண்டும். இது மாத்திரமன்றி, சுதந்திர வர்த்தகவலயம் அமைப்பதற்கு ஒருநாட்டில் வேண்டிய எல்லா வசதிகளும் சிறந்த துறைமுகவசதி, நீர் மின்சாரம், விமானத்தரிப்பிடம், குறைந்த சம்பளத்துக்குக் கூலியாட்கள் முதலான வசதிகள் அவசியம் இவ்வசதிகள், அரசியல் ஸ்திரம் நமது நாட்டில் உண்டு. இதனால்தான் 2000 ஏக்கர் கொண்ட இலங்கை கட்டுநாயக்காப் பகுதியைச் சேர்ந்த நிலத்தை அண்மையில் இலங்கையில் அமைக்கவிருக்கும் 'சுதந்திர வர்த்தக வலயத்துக்கு'' இலங்கை அரசாங்கம் ஒதுக்கி இருப்பது நாம் எல்லோரும் அறிந்த உண்மையாகும்.

—கே.எம்.கலீல்

கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்


## தேவை

விவசாய சம்பந்தமாக விவசாயிகளை நேரடியாக தொடர்பு கொண்டு பிரசாரம், அறிவூட்டல் செய்வதற்கு விவசாயப் பட்டதாரிகள் அல்லது விவசாய டிப்ளோமா தகுதி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்ப முடிவு திகதி 21-02-78**

விளம்பர இலக்கம்-10, மே/பா ஈழநாடு,
த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்.

ஈழநாடு
The Eelanaadu

## ஜனாதிபதி ஜே. ஆரின் யோசனை

ஆயுதங்கள் உற்பத்தி, விநியோகம், பாவனை ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு உலகஅதிகாரம் வாய்ந்த பீடமொன்றை நியமிக்க வேண்டுமென்று இலங்கையின் ஜனாதிபதி திரு.ஜே. ஆர். ஜயவர்த்தன, சிட்னியில் நடைபெறும் காமன்வெல்த் தலைவர்களின் ஆசிய பசுபிக் பிரதேச மகாநாட்டில் நல்லதொரு யோசனையைத் தெரிவித்திருக்கிறார்.

இரண்டாவது உலக யுத்தத்தின் பின் நூறு ஆயுதப் போராட்டங்கள் நிகழ்ந்திருப்பதாகவும் இவற்றில் பெரும்பாலானவை எல்லைத் தகராறுகளென்றும் இலங்கை ஜனாதிபதி எடுத்துக் கூறியிருக்கின்றார்.

ஆயுதக்குறைப்பு மட்டும் போதாது; பூரண ஆயுதப் பரிகரணம் வேண்டுமென்பதையும் ஜனாதிபதி மிகத் தெளிவாக எடுத்துக்கூறியிருக்கிறார்.

ஆயுத உற்பத்திக்கும் விநியோகத்துக்கும் செலவிடும் பெருந்தொகைப் பணத்தை மக்களின் பட்டினியைத் தீர்ப்பதற்குச்செலவிட்டால் உலகில் அமைதியும் சுபீட்சமும் நிலவுமென்பதில் சந்தேகமில்லை.

ஆயுதப்பரிகரண மகாநாடு பல ஆண்டுகளாக நடைபெறுகிறது. ஆனால் இன்னமும் இதற்கொரு முடிவு கிடைக்கவில்லை.

அணு ஆயுதப் பரிசோதனைக்குத் தடைவிதிக்க வேண்டுமென்ற கோரிக்கை கூடச் சரியாக நிறைவேற்றப்படவில்லை. நிலத்துக்கு அடியில் பரிசோதனைக்கு விலக்களித்து இதரபரிசோதனைகளைத் தடைசெய்யும் ஒப்பந்தம்தான் கைச்சாத்திடப்பட்டிருக்கிறது.

வல்லரசுகள் ஏற்கனவே அணுவாயுதங்களை உற்பத்தி செய்து பரிசோதித்துக் குவித்து வைத்துக்கொண்ட பின்னரே அணுவாயுதபரிசோதனைக்குக் கட்டுப்பாடு விதிக்கும் ஒப்பந்தம் கைச்சாத்தானது.

இதனால்தான் சீனாவும், பிரான்சும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட மறுத்தன.

ஆயுதங்களை உற்பத்தி செய்து வைத்திருக்கும் வல்லரசுகள் உலகில் எந்தநாட்டில் பிரச்னை தோன்றினாலும் உதவி என்ற பெயரில் தங்கள் ஆயுதங்களை விற்பனை செய்து இலாபம் சம்பாதிக்கின்றன.

இதனால்தான் மத்திய கிழக்கு, மற்றும் பல நாடுகளின் எல்லைப் பிரச்னைகள் யுத்தமாக மாறி உயிர்ப்பலியெடுத்துக் கொண்டிருக்கின்றன.

மத்திய கிழக்கு மட்டுமல்ல எதியோப்பியா-சோமாலியா தகராறிலும் வல்லரசுகளே இந்தக் கைங்கரியத்தைச் செய்துவருகின்றன.

இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன தெரிவித்துள்ள யோசனையைக் காமன்வெல்த் நாடுகள் ஐ. நா. மூலம் செயல்படுத்தி, ஆயுதஉற்பத்தி விநியோகம், பாவனையைக் கட்டுப்படுத்த உலக அதிகார பீடமொன்றை நியமித்தால் நல்ல பயன்கிடைக்குமென்று எதிர்பார்க்கலாம்.

---

**சன்சோனி கமிஷன் விசாரணை**

### மரக்கறிச் சந்தை எரிந்தபோது

# அங்குவந்தால் உயிருக்கு ஆபத்து என ஆணையாளரை எச்சரித்தேன்

### யாழ். நவீனசந்தை பொறுப்பாளர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''இன்னத்தம்பி நான் அங்கு வரவா? என்று 'போனில்' ஆணையாளர் கேட்டார். வருவது உயிருக்கு ஆபத்து. பொலிஸார் சுற்றிவளைத்து எங்களை முற்றுகையிட்டுக் கொண்டிருக்கிறார்கள்'' என்று அவரிடம் கூறினேன்.

சன்சோனி கமிஷன் முன்னிலையில் நேற்று சாட்சியமளித்த நவீனமார்க்கட் பொறுப்பாளர் வேலன் சின்னத்தம்பி மேற்கண்டவாறு கூறினார்.

வேலன்சின்னத்தம்பி மேலும் கூறிதாவது: ''17-ம் திகதி காலை மார்க்கட்டுக்குப் போனேன். நான் 69ம் ஆண்டு முதல் கடமையாற்றுகிறேன். முனீஸ்வரம் வீதியில் உள்ள கருச்சில், பொலிசார் கார்களை உடைத்துவிட்டதாக எனக்குத் தகவல் கிடைத்தது. மார்க்கட்டுக்கு முன் சனக்கூட்டமாக இருந்தது. பொலிசார் யூனிபோமுடன் நின்றார்கள். அவர்களிடம் நம்பர் இல்லை.

### பொலிசார் தாக்கினர்

''மார்க்கட் மேற்பார்வையாளர் மூவர் பாதுகாப்பிற்காக, மார்க்கட் எல்லா வாசல்களையும்பூட்டச்சொல்லிஉத்தரவிட்டேன். பத்மராசாவும் ஒரு மேற்பார்வையாளர். அவரும் ஒரு கேற்றை பூட்டிக்கொண்டிருந்தார். பொலிசார் சாத்தும்போது அதனை திறந்து கொண்டு உள்ளே வந்தார்கள். அவர்கள் கொட்டன், துவக்கு வைத்திருந்தார்கள், எல்லாரையும் தாக்கினார்கள். பத்மராசாவை அந்தநேரம் அவதானிக்கவில்லை.

### மார்க்கட் எரிந்துகொண்டிருந்தது

''நான் கட்டடத்தை நோக்கி ஓடி, சுகாதார தொழிலாளரை, பூட்டும்படி கூறினேன். அதேநேரத்தில் மரக்கறி மார்க்கட், சுவாலைவிட்டு எரிந்துகொண்டிருந்தது. பொலிசார் பத்மராஜா அடித்து அவரின் மண்டை உடைந்து, ரத்தம் ஓடுவதாக கிறிஸ்டி வந்து சொன்னார்.

## ''பொலிஸார் எங்களை முற்றுகையிட்டனர்''

கந்தோரில் அவர் கிடப்பதாகவும் கூறினார்.

''நான் உடனே, ஆணையாளர் சிவஞானத்திற்கு போன்பண்ணி நடந்தவற்றை கூறினேன். அவர் அங்கு வர விரும்பினார். ஆனால் நான் வருவது நல்லதல்ல எனக் கூறினேன்.

''யாழ்ப்பாணம் எம்பியின் காரில், காயமடைந்த பத்மராசாவை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோய்விட்டார்கள் என்பதை அறிந்தேன்.

''என்னை பொலிஸ் தாக்குதலில் இருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டேன். கடைக்காரர் ஒடவசதியாக கந்தோர் முன்பக்க கதவைத் திறந்துவைத்து ஆயத்தமாக நின்றேன். தாக்கவந்தால் போவோம் என்று நின்றேன்.

### ''கடைகளை நோக்கிச் சுட்டனர்''

பின் 20 நிமிடத்தால்பொலிசார் மேல்பக்க வாசலை உடைத்து உள்ளே சென்று கடைகளுக்குச் சுட்டுக்கொண்டிருந்தார்கள். இரண்டு கடை எரிவதைக் கண்டேன். கௌரி போரேஜ் ஸ்ரோர்ஸ் கதவை பொலிசார் அடித்துடைத்ததைப் பார்த்தேன்.

சில நிமிடத்தால் அக்கடை நெருப்பு பிடித்து எரிவதைக் கண்டேன். அந்தநேரம் பொலிசார் உள்ளே பாய்ந்து துவக்குடன் ஓடிவந்தார்கள். 25 கடைக்காரரும் நானும் பாதுகாப்பான பகுதி ஒன்றுக்குள் பாய்ந்து பதுங்கியிருந்தோம். எனக்கு கைகால் எல்லாம் காயம் ஏற்பட்டது.

''10 நிமிடத்தால் வெளியில் ஏறிவந்தோம், உடனே ஆணையாளருக்கு போன்பண்ணி நடந்ததை கூறினோம். அவர் சின்னத்தம்பி பாதுகாப்பு தேடியபின் வீட்டைபோக வாருங்கோ என்றார்.

''நண்பகல் 11-45 மணிக்கு சுமார் 50 பொலிசார் பஸ் நிலையத்தை சுற்றி நின்றார்கள். 'சிற்றிபேக்கரியை' பாதுகாத்துக்கொண்டு நின்றார்கள். கடைக்காரர்களுடன் நானும் ரேட்டுக்கு வந்தோம். அதேநேரம் இராணுவ ட்ரக் வந்தது. நான் பயந்து சுட வேண்டாம் என்று கைகளை மேலே தூக்கினேன்.

### இராணுவம் வந்தது

'நீங்கள் பயப்பட வேண்டாம். நாங்கள் சுடவரவில்லை உங்களை பாதுகாக்கவந்தோம்' என்று இராணுவவீரர் ஒருவர் தமிழில் கூறினார். அவர் தமிழ் தெரிந்தவராக இருக்கவேண்டும். நான் செம்மாதெரு ஒழுங்கையால், மொஸ்க் அருகால் ஸ்ரான்லி வீதிக்கு வந்து முட்டாஸ் கடை சந்தியை அடைந்து வெளியேறினேன். அங்கு சந்தியில் டயர் எரிந்து கொண்டிருந்தது. அங்கிருந்து முஸ்லீம் வீதிவழியாக வீடு சென்றுவிட்டேன்,

### 'பொலிஸார் தடுத்தனர்'

''பொதுமக்கள் நெருப்பை அணைக்க முயன்றபோது பொலிசார் விடாமல் தடுத்துக் கொண்டிருந்தனர்.

---

### பொலிசார் துவக்குடன்

# சகலரையும் துரத்திஅடித்தனர்

(யாழ்ப்பாணம்)

''ஹட்டன் நாஷனல் வங்கி, சுபாஸ்கபே மற்றும் கடைப் பெயர்ப் பலகைகளையும், கார்களையும் பொலிசார் தாக்கியதை ஆட்சேபித்து கடையடைப்பு செய்யுமாறு கேட்டார்கள். மார்க்கட் கேட்டையும் பூட்டி ஆட்சேபம் தெரிவிக்குமாறு என்னையும் அவர்கள் கேட்டனர்''.

சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளித்த யாழ். நவீன மார்க்கட் மேற்பார்வையாளர் திரு. பஸ்தியாம்பிள்ளை கிறிஸ்டி மேற்கண்டவாறு கூறினார்.

திரு. கிறிஸ்டி மேலும் கூறியதாவது:-

'6 வருடமாக நான் கடமையாற்றுகிறேன். 16ம் திகதி வழக்கம்போல் மார்க்கட் திறப்பதற்கு காலை 6 மணிக்கு வந்தேன். கடைபெயர்ப்பலகைகள் உடைக்கப்பட்டதாகவும் பொலிசார் உடைத்ததாகவும் அறிந்தேன். நான்போய் மார்க்கட்டைத் திறந்தேன். அங்கு சனக்கூட்டத்தை கண்டேன். என்ன கூட்டம் என்று கேட்டேன். பொலிசார் தாக்கியதாக இரவு காவலாளி கூறினார்.

''கடைக்காரர்களை கடைகளை பூட்டுமாறு சிலர் கேட்டுக் கொண்டிருந்தனர். பொலிஸ் தாக்குதலை ஆட்சேபித்துகடையடைப்புச்செய்து எதிர்ப்புக் காட்டுமாறு அவர்கள் கூறினார்கள். என்னையும் மார்க்கட்டை பூட்டும்படி கேட்டார்கள். ஆணையாளருக்கு போன் பண்ணினேன்.

மார்க்கட்டை சுற்றிப்பார்த்தேன் அங்கு ஒன்றும் நடக்கவில்லை. நான் பத்மராசாவை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோய் விட்டேன்; மறுநாள் தான் கடைகள் சேதமடைந்திருந்ததைப் பார்த்தேன் பொலிசார் துவக்குடன் மார்க்கட்டுக்குள் எல்லாரையும் துரத்தி அடித்தார்கள்.

*சட்டத்தரணி:* உண்மையும் பொலிசார் அடித்தார்களா?

*கிறிஸ்டி:* அவர்கள் அடிக்கு முன் நான் ஒளித்துவிட்டேன் பத்மராசாவின் மண்டையால் இரத்தம் ஓடிக்கொண்டிருந்தது. யாழ்ப்பாண எம். பி. யின் கார் வந்தது. அவரின் உதவியுடன் அவரை ஆஸ்பத்திரியில் அனுமதித்தேன். (க)

---

**மணிவாக்கு**

அகத்தில் தூய்மையுடையோன் புறத்தில் அசுத்தமாயிருக்கமாட்டான்.

—மகாத்மாகாந்தி

---

## நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து இ. போ. ச. ஏமாற்றியதாம்

### பயணச் செலவைக் கேட்கிறார் பண்டிதர்

(யாழ்ப்பாணம்)

''இ. போ. ச. பஸ் சாரதி பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைத்துவிட்டு பின்னர் நேர்முகப் பரீட்சையை நடத்தாமல் ஏமாற்றியது பற்றி விசாரித்து நடவடிக்கை எடுப்பதுடன் கொழும்பு இ. போ. ச. தலைமைக் காரியாலயத்திற்கு அவர்கள் சென்று திரும்ப ஏற்பட்ட செலவையும் கொடுக்க நடவடிக்கை எடுக்கவும்''

இவ்வாறு கோரும் அவசரத் தந்தி ஒன்றை ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். முகமட்டுக்கும் அவரது செயலாளருக்கும் அனுப்பி உள்ளார்.

இத்தந்தியின் பிரதி ஒன்று பிரதம மந்திரியும் தற்காலிக ஜனாதிபதியுமான திரு. ஆர். பிரேமதாசாவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இத்தந்தியின் விபரம் வருமாறு:-

'ஊர்காவற்றுறை தொகுதியிலிருந்து 10 பேர் இம்மாதம் 11ம் திகதி இ. போ. ச. பஸ் சாரதிகளுக்கான நேர்முகப் பரீட்சைக்கு கொழும்பு இ. போ. ச. தலைமைக் காரியாலயத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் 100 ரூபாவுக்கும் மேலாகச் செலவிட்டு தலைமைக்காரியாலயம் சென்று கொதிக்கும் வெய்யிலில் சுமார் 4 மணித்தியாலம் வரை காத்திருந்தபின்னர் நேர்முகப் பரீட்சை நடைபெறமாட்டாது என்று அதிகாரிகள் அறிவித்தனர். அவர்களை நேர்முகப் பரீட்சைக்கென அழைத்து ஏமாற்றியது பற்றி விசாரணை செய்வதுடன் அவர்கள் செலவழித்த பணத்தையும் அவர்களுக்குக் கொடுக்கநடவடிக்கை எடுக்கவும்.

ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை, பொத்துவில் ஆகிய தொகுதிகளிலிருந்து சுமார் 20 பேர்வரை இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு ஏமாற்றப்பட்டுள்ளனர் என்றும் பண்டிதர் நமது நிருபரிடம் கூறினார். (இ)

---

## அரிசி விலை ரூபா 2-70 ஆக குறையும்

[கொழும்பு]

இம்மாதம் 20ந் திகதிமுதல் அரிசியின் விலையை 2 ரூபா 70 சதமாக குறைப்பதற்கு நேற்றைய தினம் நடைபெற்ற பிரதிவர்த்தக அமைச்சர் திரு. எஸ். அமரசிறி தலைமையில் கூடிய வர்த்தகர்கள் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

---

## உற்சவம்

[ஊரெழு]

ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது எதிர்வரும் 21-ந் திகதி செவ்வாய்க்கிழமை ரதோற்சவமும் 22ந் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவமும் அடுத்தநாள் பூங்காவன உர்சவமும் நடைபெறவிருக்கின்றன. (அ)

# எகிப்துக்கு முதல்முறையாக அமெரிக்க போர்விமானம்

## இஸ்ரேல், சவூதி அரேபியாவுக்கும் கிடைக்கும்

வாஷிங்டன், பெப். 15

இஸ்ரேல், எகிப்து, சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்கு 200 நவீன போர் விமானங்களை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

வாஷிங்டனில் வெள்ளை மாளிகை இத்தகவலை அறிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கு 85 விமானங்களையும், சவூதிஅரேபியாவுக்கு 60 விமானங்களையும், எகிப்துக்கு 50 விமானங்களையும் அமெரிக்கா வழங்கும்.

அமெரிக்கா எகிப்துக்கு யுத்தவிமானங்களைவழங்குவது இதுவே முதல் தடவையாகும். (இ)

## நட்சத்திர இரவில் 1கோடி78லட்சம் வசூல்

சென்னை, பெப். 15

திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் நடைபெற்ற 'நட்சத்திர இரவி' நிகழ்ச்சியில் 1கோடியே 78லட்சம் ரூபா வசூலிக்கப்பட்டதாக தமிழக முதல்வர் திரு.எம்.ஜி.இராமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்த நட்சத்திர இரவு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கும் மற்றும் நடிகர்களுக்கும் எம்.ஜி.ஆர். நன்றி கூறினார். [இ]

## வதிரி இளைஞர் படுகொலை:

# கைதான இரு பெண்கள் பிணையில் சென்றனர்

[கரணவாய்]

வதிரி துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு நிமாண்டில் வைக்கப்பட்ட சந்தேக நபர்கள் நால்வரில், பெண்களான இருவருக்கு பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

வதிரியைச் சேர்ந்த 23 வயதான சுப்பிரமணியம் தவராசா என்ற இளைஞன் சுட்டுப் படுகொலைசெய்யப்பட்டது தொடர்பாக அதேஇடத்தைச் சேர்ந்த வல்லிபுரம் சிவலிங்கம், அவர் மகன் சிவநேசராசா, மனைவி நேசம்மா. மகள் விமலஈஸ்வரி ஆகியோர் சந்தேகத்தின்பேரில் பருத்தித்துறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் பருத்தித்துறை நீதிபதி திரு. அ. கங்காதரன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்ட போது பெண்களான இரு சந்தேகநபர்களையும் பிணையில் செல்ல அனுமதித்ததோடு, மற்றைய இரு சந்தேககளையும் தொடர்ந்து நிமாண்டில் வைக்குமாறு நீதவான் பணித்தார். சந்தேகநபர்களுக்காக சட்டத்தரணி வி. என். நவரத்தினம் தலைமையில் ஏழு சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தனர். [அ]

## சுயநலமிகளின் கூட்டமே

# ஜனதா கட்சி

## இந்திரா கண்டனம்

கல்கத்தா, பெப். 15

சுயநலமிகளின் கூட்டமே ஜனதாக்கட்சி அமைப்பாகும். ஜனதா அரசு நாட்டை தவறுன் வழிக்கு இட்டுச்செல்கிறது.

இவ்வாறு திருமதி இந்திரா கல்கத்தாவில் நிருபர்கள் மத்தியில் உரையாற்றுகையில் கூறினார்.

### ஏழ்மையை அகற்ற இயக்கம்

நாட்டில் ஏழ்மையை அகற்ற தாம் விரைவில் இயக்கம் ஒன்றை நடத்த உள்ளதாகவும் திருமதி காந்தி கூறினார்.

திருமதி காந்தி மேலும் பேசுகையில் கூறியதாவது:

ஜனதா கட்சி சரியான வழிகாட்டியின்றி இயங்கி வருகிறது.

நாம் சர்வாதிகார ஆட்சி நடத்தியதாக ஜனதாகட்சி குற்றம் சாட்டிவருகிறது. நாம் என்றுமே சர்வாதிகாரப்போக்கைக் கடைப்பிடித்தது கிடையாது. எம்மைக் குறைகூறும் ஜனதா அரசு முதலாளித்துவக் கொள்கையைக்கடைப்பிடித்து வருகிறது. (இ)

## நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்[

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழக நிர்வாகிகள் பின்வருமாறு:- போஷகர்கள்: டபிள்யு. எஸ். செந்தில்நாதன் (சட்டத்தரணி[ பிரம்மஸ்ரீ க. சிதாராமசாஸ்திரிகள், தலைவர் செ. சுப்பிரமணியம், உபதலைவர் ஆர். வி. எஸ். பாலசுப்பிரமணியம், டாக்டர்: நா. கனகரத்தினம், செயலாளர் இராஜயோகன், உபசெயலாளர்: வே. குகநேசன், பொருளாளர் ம. கணேசலிங்கம், நூலகப் பொறுப்பாளர்: கு. கணேசராஜா, பரீட்சை செயலாளர் சைவப்புலவர் வ.கந்தசாமி கணக்குப்பரிசோதகர் எஸ். வள்ளிநாயகம், உட்கணக்குபரிசோதகர் மு. க. இரத்தினவேலுப்பிள்ளை நிர்வாகசபை உறுப்பினர் 15 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

0 0 0

]வட்டுக்கோட்டை]

காரைநகர் மறுமலர்ச்சி மன்ற நிர்வாகிகள்: தலைவர்: சி.குமாரவேலு, பொதுச் செயலாளர்: செ. ஆனந்தராசா, நிர்வாகச் செயலாளர்: சி. பழனிமலை, பொருளாளர்: வே.பத்மநாதன், உபதலைவர்: ஐ.சற்குணராசா, உபபொருளாளர்: செ. பற்குணராசா, கணக்குப்பரிசோதகர்: ஏ. அருள்தாசன், விளையாட்டுத் தலைவர்: ப.தேவராசா, விசேட நிருபர்: இ. அருள்பாலன், பத்திராதிபர் ஐ. தேவகருணாகரன், காப்பாளர்: யோ.ஜெயரத்தினம்.

0 0 0

[காரைநகர்[

காரைநகர் ஊரி நல்லொழுக்க வாலிபர் இயக்க நிர்வாகிகள்: தலைவர். ஐ.பரமு, உபதலைவர்: க. முருகையா, காரியதரிசி:க.கந்தசாமி, உபகாரியதரிசிவே. வைத்திலிங்கம், தனாதிகாரி க.வேலுப்பிள்ளை.

0 0 0

]காரைநகர்]

காரைநகர் ஊரி, அ.மி.த.க. பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள்: தலைவர்: செ.மார்க்கண்டு (அதிபர்) உபதலைவர்: க நாகமணி, உபதலைவர்: க.நாகமணி, காரியதரிசி: ஐ.பரமு, உபகாரியதரிசி: ஐ. செல்லத்துரை, தனாதிகாரி: சி.சபாரத்தினம். செயலவை உறுப்பினர்கள்: வே.பொன்னம்பலம், க. சின்னத்துரை, க. செல்லத்துரை, க அருளையா, ஐ.நடராசா, க.வேலுப்பிள்ளை.

# ஆல் இந்திய வானொலி

## 'ஆல் இந்திரா'வாக இயங்கியதாம்

### சரண்சிங் குற்றச்சாட்டு

புதுடில்லி, பெப். 15

திருமதி இந்திராவின்ஆட்சிக்காலத்தில் அவரது புகழ்பாடவும், அவரின்புதல்வன் சஞ்சய் காந்தியின் புகழ் பாடவும் 'ஆல் இந்தியாவானொலி' 'ஆல் இந்திரா வானொலி'யாக இயங்கிவந்தது. இப்போது ஜனதாகட்சி ஆட்சிக்குவந்ததும் அது மீண்டும் 'ஆல் இந்தியாவானொலி'யாகிவிட்டது.

இவ்வாறு உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் மகாராஷ்டிரத்தில் நடைபெற்றகூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

திருமதி காந்தி மீது எனக்கு தனிப்பட்ட ரேகுளதுவும்தாம் கிடையாது. வருங்காலத்திலும் மக்களின் உரிமைகளை எவரும் நசுக்கிவிடக்கூடாது என்பதற்காகவே திருமதி காந்தி மீதும் அவரது சகாக்கள் மீதும் கமிஷன் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. சட்டத்திற்கு சகலரும் சமன்.

### வம்சாவழி ஆட்சி

நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி சர்வாதிகார தர்பார் நடத்திய திருமதி காந்தி தமது வம்சாவளி ஆட்சியை தொடர்ந்து நடத்த முனைந்தார். [இ[

## சுன்னாகம் ஆசிரியை இல்லக் கொள்ளை: மற்றொரு சந்தேக நபருக்கும் பிணை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸ் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய சுன்னாகம் ஆசிரியை இல்லக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட குகதாசன் [தாசன்[ என்ற சந்தேக நபரை 1000 ரூபா பிணையில் செல்வதற்கு மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. எம். டி. ஜேசுறட்ணம் அனுமதி வழங்கினார்.

இது தொடர்பான விசாரணை நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இக்கொள்ளை தொடர்பாக கைதாகி பின் பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டிருந்த மற்றைய சந்தேக நபர்களும் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் இன்னமும் பூர்த்திபெறவில்லை என்றும் மற்றொரு சந்தேக நபர் கைதுசெய்யப்பட வேண்டியிருப்பதுடன்கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களில் 'கசெற்' (பதிவு நாடாவுடன் கூடிய வானொலி) இரு மகளிர் கைக் கடிகாரங்கள் என்பன இன்னமும் கைப்பற்றப்படவில்லையென்றும் சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ரி. தாமோதரம்பிள்ளை நீதிபதியிடம் தெரித்தார்.

பொலிஸ் தரப்பில் சட்டத்தரணி திரு. ரி. தம்பிரத்தினமும் ஆஜராகியிருந்தார். சந்தேக நபர்களில் இருவர் ஏற்கனவே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தாசன் என்ற சந்தேக நபரையும் பிணையில் செல்ல அனுமதிக்குமாறும் சட்டத்தரணி திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் நீதிபதியிடம் கோரினார்.

சந்தேக நபர் தாசனின் வாக்குமூலம் றிமாண்டில் வைத்து பதிவுசெய்துகொள்ளப்பட்டுள்ள போதிலும் அவரைத் தாம் விசாரணைக்குட்படுத்த வேண்டியுள்ளதாகவும் இவர் மூலம் முக்கிய பல விபரங்களை இக்கொள்ளை தொடர்பாகப் பெறமுடியும் என்று தாம் கருதுவதாகவும் இன்ஸ்பெக்டர் நீதிபதியிடம் தெரிவித்தார்.

சந்தேக நபரை 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி மேல் விசாரணையை மே மாதம் 23-ம் திகதி வரை ஒத்திவைத்தார்.

பிரஸ்தாப ஆசிரியையின் இல்லத்தில் முகமூடியுடன் நுழைந்த கொள்ளைக்கோஷ்டி ஆயுத முனையில் சுமார் 25,000 ரூபா பெறுமதிமிக்க தங்க நகைகள் பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றிருந்தது' [உ]

[யாழ்ப்பாணம்[

யாழ்ப்பாணம் ஆத்திசூடி வீதி கலைமகள் ச. ச. நிலைய நிர்வாகிகள் போஷகர்கள் 7 பேர் தலைவர். திரு. சி. நவரட்ணம், உபதலைவர் சி. அரியரட்ணம், இணைச்செயலாளர்கள் க. திருநாவுக்கரசு க. இராஜேஸ்வரன், இணைப் பொருளாளர்கள்: ந. திருச்செல்வம். சி. இராசேந்திரம் மற்றும் விளையாட்டுத்தலைவர்கள் 3 பத்திராதிபர்கள் 2 கலைத்தலைவர் 2 நிர்வாகசபை உறுப்பினர் 7 வெள்ளி விழா நிதிக்குழு9 பொக்கிஷாதிபதி

0 0 0

[தெல்லிப்பழை[

திருமகள் சன சமூகநிலைய 22-வது ஆண்டு விழா தலைவர் திரு. க. திசைவீரசிங்கம் தலைமையிற் கூடியது. கீழ்க்காணும் உத்தியோகத்தவர்கள் நடப்பு வருடத்திற்குத் தெரியப்பட்டார்கள் தலைவர் பொ. தங்கராசா, உபதலைவர் க. திசைவீரசிங்கம், செயலாளர் கலாநிதி நா. சத்திவேல் உபசெயலாளர் இ. ரேகன் இராசசிங்கம், பொருளாளர் வ. சிவசுப்பிரமணியம், உபபொருளாளர் த. குணரத்தினம் நிர்வாகசபை உறுப்பினர்களாகத. நடராசா நா. வேலாயுதபிள்ளை அ. இராசையா அ. ஜெயகுமார் கு. மயில்வாகனம் தெரிவு செய்யப்பட்டனர்.

## காந்திய தத்துவங்களை இந்தியாகள் மறந்துவிட்டனராம்

### ஆச்சார்ய கிருப்ளானி கவலை

சென்னை, பெப். 15

இந்தியமக்களும் அரசும்காந்திய தத்துவத்தை மறந்துவிட்டமையினாலேயே நாட்டில் பெரும் பிரச்னைகள் தோன்றியது. காந்திய தத்துவத்தைக் கடைப்பிடிப்பதன் மூலமே நாட்டின் பிரச்னைகளைத் தீர்க்க முடியும். இதுவே பிரச்னைகளுக்குத் தீர்வுகாணும் ஒரேவழி.

இவ்வாறு ஆச்சார்ய கிருபளானி கூறினார்.

கன்னியாகுமரியில் நடைபெற்ற சர்வோதய மகாநாடு ஒன்றில் கலந்துகொண்டுஉரையாற்றுகையிலேயே அவர்மேற்கண்டவாறு கூறினார்.

மக்களுக்கும் அரசுக்கும் ஒத்துழைப்பு வழங்கிவரும் அதே வேளையில் அரசு சரிவர இயங்குகின்றதா என்பதையும் கண்காணிக்க வேண்டுமென்றும் அவர் கூறினார். (இ)

## முதலாவது கிரிக்கட் டெஸ்ட்:

# முதல் தடவையாக நியூஸி. இங்கிலாந்தை வென்றது

வெலிங்டன், பெப். 15

நியூஸிலாந்து கிரிக்கட் கோஷ்டி அதன் 47 ஆண்டு கிரிக்கட் சரித்திரத்தில் முதல் தடவையாக இங்கிலாந்து கோஷ்டியை வெற்றிபெற்றுள்ளது.

இன்று முடிவடைந்த நியூஸி. இங்கிலாந்து முதலாவது டெட்டில் நியூஸிலாந்து கோஷ்டி 72 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நியூஸிலாந்துக்கு எதிராக இதுவரை நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளில் இந்த டெஸ்டின் 2வது இன்னிங்ஸில் இங்கிலாந்து ஆகக்குறைந்த ஓட்டங்களைப் [64] பெற்றது.

இங்கிலாந்து கோஷ்டியின் காப்டன் போய்கொட் முதல் இன்னிங்ஸில் 7மணித்தியாலங்கள் 22 நிமிடங்களில் 77 ஓட்டங்களை மட்டுமே பெற்றது குறிப்பிடத்தக்கது.

ஸ்கோர் விபரம்- நியூஸிலாந்து 228, 123. இங்கிலாந்து 215, 64. [இ]

## பெண்கைது

[சங்கானை]

பண்டத்தரிப்பு பஸ் தரிப்பு நிலையத்தில் வைத்து சிறுபிள்ளையின் கழுத்திலிருந்த சங்கிலியை அறுத்தாரம் பெண் ஒருவர்.

இச்சம்பவம் பட்டப்பகலில் நிகழ்ந்துள்ளது.

சண்டிலிப்பாய் ரோட் பண்டைத்தரிப்பில் இருக்கும் சண்முகநாதன் கங்காதேவி தனது பெண்பிள்ளையுடன் பஸ்ஸக்குக்காத்து நின்ற போது குறத்தி பெண் ஒருவர் கங்காதேவியின் பிள்ளையின் கழுத்தில் இருந்த தங்க சங்கிலியை அறுத்தாராம் பிள்ளை கத்தவே தாயாரும் அங்கு நின்ற பொதுமக்களுமாக ஆறுமுகம் வள்ளியம்மையான குறத்தி பெண்ணை பிடித்து சங்கிலியை கைப்பற்றியது உடன் பொலிஸில் ஒப்படைத்தனர்.

சப்இன்ஸ்பெக்டர் இராசையா விசாரணை நடாத்தி வருகிறார். (உ)

வெலிங்டன்... 

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு: 2-30,
ஜெமினி - சரோஜாதேவி
பனித்திரை

RIO Daily 4 Shows
(Jaffna) Last Few Days
HIGH
VELOCITY

றீகல் புதிய வெளியீடு!
(யாழ். நகர்) அசோக்குமார் — மீனாகுமாரி
தினசரி 2-30, 6-30 இரவு 9-45 நடித்த
பக்கீஷா - PAKEEZAH
ஹிந்தி (கலர்-சினிமாஸ்கோப்) சங்கீதம்: நௌசாத்
[இந்திய திரைப்பட விழாவில் பரிசுபெற்ற படம்]
From; 18-2-78
Crazy Girls and the Sunny Boys

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினிகணேசன்-வைஜெயந்திமாலா
நடித்த
தேன்நிலவு

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஓய். விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்: கே. பாலசந்தர்

ராஜா தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
[யாழ்ப்பாணம்]
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா-சோ-விஜயகுமார்
நடித்த
மேயர் மீனாட்சி

2-வது வெற்றி மாதம்
ராணி வி. பி. கணேஷன் — சுபாஷினி
ராம்தாஸ் — ஜெனிட்டா
யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள் நடித்த
நான் உங்கள் தோழன்
அமரர் செல்வநாயகத்தின் இறுதியாத்திரைக் காட்சியும் கதையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
[இன்றுமட்டும்]
மோட்டார் சுந்தரம்பிள்ளை
சிறுவர்களுக்கான ஆங்கிலப்படம்:
18-2-78, 19-2-78 சனி, ஞாயிறு காலை 8-30மணிக்குமட்டும்
"Kingdom in the Clouds"

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
இன்ஸ்பெக்டர் மனைவி
நாளை முதல்
ஜெமினிகணேஷ், பத்மினி, முத்துராமன் நடித்த
சித்தி (புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா
கணவன்

கொட்டகை நிறைந்த காட்சியுடன் நடைபெறுகிறது
லிடோ போன் 7693
முத்துராமன், சிவகுமார், சுஜாதா
(யாழ் நகர்) நடித்த
உறவு சொல்ல ஒருவன்

## சன்சோனி கமிஷன் விசாரணை:

# "என்மனைவியை உதைத்து துடிக்கத் துடிக்க வீதியில் இழுத்துச் சென்றான்

## தொழிலாளர் முன்னிலையில் என்னையும் நிர்வாணமாகச் செல்ல நிர்ப்பந்தித்தான்"

### குருநாகல் தோட்ட உரிமையாளர் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

"என் முன்னிலையில் கொள்ளைக் கோஷ்டித் தலைவன் என் மனைவியின் வயிற்றில்உதைத்து லுங்கியை இழுத்து, தலைமயிரைப்பிடித்து வீதி வழியாகத் துடிதுடிக்க இழுத்துச்சென்றான் எனது சாரத்தை உரிந்துவிட்டு கிராமத் தலைவர்கள், தோட்டத் தொழிலாளர் முன்னிலையில் என்னை நிர்வாணமாகப் போகும்படி நிர்ப்பந்தித்தான்"

சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளித்த குருநாகல் தோட்டச் சொந்தக்காரரான எஸ். தருமரத்தினம் என்பவர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. தருமரத்தினம் மேலும் கூறியதாவது:-

"தற்போது நான் நல்லூரில் இருக்கின்றேன். ஆகஸ்ட் கலவரத்தின்போது நான் குருநாகலில் ஒரு தோட்டத்தில் உள்ள பங்களாவில் இருந்தேன். அந்தத் தோட்டத்தை 76-ம் ஆண்டு டிசம்பர்மாதம் வாங்கினேன். குருநாகல் நகரத்திலிருந்து நாலரை மைல்களுக்கு அப்பால் இத் தோட்டம் இருக்கிறது. ஒரு கோழிப் பண்ணையும் வைத்திருந்தேன்.

அங்கு 600 பெரிய இனக் கோழிகள் இருந்தன.

**75 பேர் கொண்ட குண்டர் கோஷ்டி**

ஆகஸ்ட் 18ம் திகதி மாலை 5-30 மணிக்கு, சுமார் 75 பேர் கொண்ட குண்டர் கோஷ்டியொன்று வந்து பங்களாவை கொள்ளையடித்தது. என்னுடைய துவக்கையும் தோட்டாக்களையும் தருமாறு கேட்டனர். பின்னர் 5000 ரூபாவுக்கு பணம்தருமாறுகேட்டார்கள். நான் கொடுக்கவில்லை. 50ரூபா கொடுத்தேன். அதில் அவர்கள் திருப்தியடைந்ததாகத்தெரியவில்லை. என் பங்களாவிற்குள் புகுந்து அலமாரி லாச்சிகளைத் திறந்து பார்த்தனர். பெறுமதியான பொருட்களை எடுத்துக்கொண்டு அவற்றை மூடைகளாகக் கட்டிக்கொண்டனர்.

**மற்றொரு கோஷ்டி**

பின்பு கோழிப்பண்ணைக்குச் சென்று கோழிகளையும் பிடித்துச் சென்றனர். ஒருமுறை வானத்தைநோக்கிச்சுட்டனர். அதன்பின் சென்றுவிட்டனர்.

15 நிமிடத்தின் பின் மற்றொரு கோஷ்டியினர், வெலகதரயைச் சேர்ந்த பிரேமரத்தின தலைமையில் வந்தது. இவர்களில் 50 பேர் இருந்தனர். பங்களாவில் உள்ள பொருட்களைக் கொள்ளையடிக்குமாறு கொள்ளைக்கோஷ்டித் தலைவன் கட்டளையிட்டான்.

கொள்ளைக் கோஷ்டித் தலைவன் என் மனைவியை ஈவிரக்கமின்றித் தாக்கினான். தன்னைத் தாக்கவேண்டாமென மனைவி கெஞ்சிக் கேட்டபோதும் அவன் விட்டுவிடவில்லை.

அவளை அடிக்கவேண்டாம், என்னை அடி என நான் கத்தினேன். ஆனால் அவன் தகாத வார்த்தைகளால் பேசி, என் மனைவியின் வயிற்றில் குத்தினான். தடுக்கச் சென்றபோது என் கண்ணிலும் அடித்தான். என் மனைவியின் லுங்கியைக் இழுத்தான். பின் தலைமயிரைப் பிடித்து வீதிக்கு இழுத்துச் சென்றான். என் கையில் வெட்டினார்கள். என் சாரத்தை உரிந்துவிட்டுப் பலர் முன்னிலையில் என்னை நிர்வாணமாகச் செல்லுமாறு கொள்ளைக் கோஷ்டித் தலைவன் உத்தரவிட்டான். என் மோதிரத்தையும், மனைவியின் தோட்டையும் பறித்தெடுத்தான்.

(6-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சருக்கு சைக்கிளோட்டி தந்தி

[யாழ்ப்பாணம்]

சைக்கிள் டயருக்கு மீண்டும் கட்டுப்பாட்டு விலையை அமுல்செய்யுமாறு சைக்கிளோட்டி ஒருவர் வர்த்தக அமைச்சரை தந்திமூலம் கேட்டுள்ளார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த கே. சண்முகநாதன் என்ற சைக்கிளோட்டி அமைச்சருக்கு அடித்துள்ள தந்தி விபரம் வருமாறு:

யாழ் ஐக்கிய வியாபாரச் சங்கத்தில் சைக்கிள் டயர் ஒன்று 17 ரூபா விற்கும்போது தனியார்கடைகளில் டயர் ஒன்று 22 ரூபா 50 சதத்துக்கு விற்பனைசெய்யப்படுகிறது எனவே உடன் டயருக்கு விலைக்கட்டுப்பாட்டை அமுல்செய்யுமாறு வேண்டுகிறேன். [இ]

## காரைநகருக்கு—

[2 ம் பக்கத் தொடர்ச்சி]

யும் எடுத்துக்கூறி நியாயம் பெற முடியாத நிலை இருந்து வந்துள்ளது. இந்நிலையை கடந்த வருடம் ஜூலை மாதத்தோடு மாற்றியமைத்துள்ளோம்'' என்றார்.

இக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த திரு. க. அருணாசலம் பேசுகையில், பழையனவற்றையெல்லாம் மறந்து காரைநகர் மக்களுக்குச் சிறந்த முறையில் சேவையாற்ற சங்க ஊழியர்கள் அனைவரையும் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இயக்குநர்சபை உறுப்பினர்களான ஐ. கிருஷ்ணர், செ. இராமநாதன் ஆகியோரும்சங்கபொதுமுகாமையாளர் திரு. அ. அருளம்பலம், கூட்டுறவுப் பரிசோதகர் திரு. க. சொர்ணலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர். (அ)

## சைக்கிளுக்கு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பெரேராவும் இருந்தார். அவரை எனக்குத் தெரியும். யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றினார். நான் அதன்பின் ஆஸ்பத்திரி சந்தியில் பஸ்ஸை திருப்பி டிப்போவிற்கு சென்றுவிட்டேன். பஸ்நிலையத்திற்குப் போக பொலிசார் விடவில்லை" இன்ஸ்பெக்டர் வால்டர் பெரேரா பின்னால் நின்று 'விடடா,போடா' என்றுகூறிக் கொண்டிருந்தார்.

இ. போ. ச. சாரதி வேலுப்பிள்ளை செல்வராசா கூறியதாவது: நான் கோண்டாவில் டிப்போவிலிருந்து பஸ் நிலையத்திற்கு சென்றேன். விக்டோறியா வீதி சந்தியில் பொலிசார் மறித்தார்கள். றேட்டில் நின்றவர்களை கலைத்தார்கள் அவர்கள் சயிக்கிளை போட்டுவிட்டு ஓடினார்கள். பொலிசார் சயிக்கிளை றேட்டில் தூக்கிப்போட்டு பஸ்ஸைஸ் ஓட்டும்படி கூறினார்கள். இன்ஸ்பெக்டர் வால்டர் பெரேராவும் நின்றார். சயிக்கிளுக்கு மேலால் ஓட்டமுடியாது என்றேன். ஒரு பொலிசார் எனக்கு கையில் அடித்து காயப்படுத்தினார். நான் டி. எஸ் பி யிடம் சம்பவம்பற்றிக் கூறினேன்.

பஸ் கண்டக்டர் சி செல்வராசாகூறியதாவது: 25 வருடம் கண்டக்டராக கடமையாற்றுகிறேன். அன்று நாவற்குழியிலிருந்து குறிகட்டுவானுக்கு சென்றுவிட்டு டிப்போ நோக்கி பஸ்ஸில் சென்றுகொண்டிருந்தேன்.

ஆரியகுளம் சந்தியில் பொலிசார் மறித்தார்கள். 'ருலாமி எங்களை ஒன்றும்செய்யாவேண்டாம், என்று கூறிவிட்டு ஏறினேன். அவர்களும் முன்னும் பின்னும் ஏறினார்கள். கன்னாதிட்டிக்கு போனார்கள். பஸ்ஸை அங்கு நிறுத்தினார்கள். நகைக்கடையொன்றை உடைத்துக் கொள்ளையடித்தார்கள். பின் அதே பஸ்ஸில் நாகவிகாரைச் சந்திக்கு வந்து இறங்கினார்கள். [க]

## சந்தேகத்தில் ஒருவர் கைது

(கரணவாய்)

புலோலி இட்ணபிள்ளை என்பவரின் மர்ம மரணம் தொடர்பாக துன்னாலையைச் சேர்ந்த விநாயகமூர்த்தி என்பவரைப் பருத்தித்துறைப் பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

சந்தேக நபர் பருத்தித்துறை நீதிபதி திரு. அ. கங்காதரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது சந்தேக நபரை றிமாண்டில் வைக்குமாறு நீதவான் பணித்தார். [அ]

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30 6-30 9-45,
நினைத்ததை
முடிப்பவன்

நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி: 6-45, 10-0
சிவாஜி - வாணிஸ்ரீ
சிவகாமியின்
செல்வன்

## வெற்றி

[பருத்தித்துறை]

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்குமிடையில் ஹட்லிக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி 4 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது. [அ]

# கிரிக்கெட்

## பரியோவான் வெற்றி

[அரியாலை]

யாழ்ப்பாணம் வை. எம். ஸி. ஏ. கிரிக்கட் கோஷ்டிக்கும் யாழ் பரியோவான் கல்லூரிக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் பரியோவான் கல்லூரிக் கோஷ்டி 4 விக்கட்டுகளாலும் 83 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.

முதலாவது முறையாக துடுப்பெடுத்தாடிய வை. எம். ஸி. ஏ. கோஷ்டி எல்லா விக்கட்டுகளையும் இழந்து 134 ஓட்டங்களைப்பெற்று ஆட்டத்தை முடித்துக்கொண்டது. அதனைத்தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பரியோவான் கல்லூரிக் கோஷ்டி 6 விக்கட்டுகளை இழந்து 317 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

### கலவரத்துக்குப்பின் கந்தோர் சென்றபோது

# 'தமிழ் ஈழம்' எப்போ கிடைக்கும் என சிங்கள உதவியாளர்கேலிசெய்தனராம்

## கடற்றெழில் ஆய்வு அலுவலர் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

"சிங்கள நாட்டில் தமிழ் உத்தியோகத்தர்கள் வேலை செய்வதைச் சிங்கள மக்கள் விரும்பவில்லை" எனச் சன்சோனி கமிஷன் முன் தமிழில் சாட்சியமளித்த கடற்றெழில் ஆராய்ச்சி நிலைய ஆய்வு அலுவலர் திரு. க. சச்சிதானந்தன் கூறினார்.

கலவரத்தின் பின் தான் கந்தோருக்குச் சென்றபோது ஆய்வுகூடச் சிங்கள உதவியாளர் ஒருவர் தமிழ் ஈழம் எப்ப வருகிறது? என நக்கலாகத் தன்னைக் கேட்டதாகவும் அவர் கூறினார்.

இந்நாட்டில் இனக் கலவரம் வெள்ளம் வருவது போல அடிக்கடி வந்து கொண்டிருக்குமென்றும் இதோடு வாழப் பழகிக் கொள்ள வேண்டுமென இலாகாஅதிபரிடம்இடமாற்றம் கேட்டுச் சென்ற தன்னிடம் கூறியதாகவும் திரு. சச்சிதானந்தன் கூறினார்.

அடிக்கடி வெள்ளம் வருவதுபோலத் தான் வாழத் தயாரில்லையென்றும் அதே போல் சிங்கள மக்களும் வாழத் தயாரில்லையெனத் தான் அறிந்துவிட்டதாகவும் அவர் கூறினார்.

சன்சோனி கமிஷன் விசாரணையைப் பார்ப்பதற்கு நேற்றுப் பெருந்திரளான மாணவர்கள் வந்திருந்தனர்

திரு. சச்சிதானந்தன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"தற்போது நான் சாவகச்சேரியில் குடும்பத்துடன் இருக்கிறேன். கலவரத்தின்போது நான் கிரிலப்பனையில் இருந்தேன். கலவரத்தின்போது தாக்கப்பட்டேன்.

20ந் தேதி இரவு தமிழ் வீடுகளுக்கு கற்கள் வீசப்பட்டது. பக்கத்து வீட்டிற்குக் குண்டு அடிக்கப்பட்டது. கிரிலப்பனை தாக்கப்பட்ட இடங்களில் ஒன்றாகும். இதனால் பம்பலப்பிட்டி அகதிகள் முகாமிற்குக் குடும்பத்துடன் செல்ல விரும்பினேன். யாழ்ப்பாணம் வரும் வரை அகதிகள் முகாமில் கழித்தேன்.

நான் கடற்றெழில் ஆராய்ச்சி நிலைய ஆய்வுகூடத்தில் கடமையாற்றினேன். நான் ஒரு உயிரியல் பட்டதாரி. எனக்குச் சம்பளம் 1200 ரூபா. ஒரு கிழமை நாங்கள் அகதிகள் முகாமிலிருந்தோம்.

அகதிகள் முகாமுக்கு வந்தவர்கள் ஒருவருக்கொருவர் தங்கள் கஷ்டங்களைப் பகிர்ந்து கொண்டனர். எனக்கு நான்கு குழந்தைகள். அவர்களும் முகாமில் இருந்தார்கள்

என் வீட்டை வங்கியில் கடனெடுத்துக் கட்டினேன். கிரிலப்பனையில் இருப்பது என் சொந்த வீடு. கலவரத்தின் பின் கொழும்பு செல்லாமல் விட்டுவிட்டேன்

யாழ்ப்பாணக் கடற்றெழில் ஆராய்ச்சி நிலையத்திற்கு இடமாற்றம் தரும்படி கடிதம் எழுதினேன். யாழ்ப்பாணத்தில் ஆய்வுகூட வசதிகள் இல்லையென்றும் அதனால் இடமாற்றம் தரமுடியாதென்றும் பதில் வந்தது. அது பொருத்தமானபதிலாக இருக்கவில்லை. ஆராய்ச்சி செய்பவரே அவர் வசதியான இடத்திலிருந்தே செய்வது பற்றித் தீர்மானிக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் இருந்து ஆராய்ச்சி செய்யமுடியும். நான் யாழ்ப்பாணக் குடாக் கடல், வங்காள விரிகுடா பாக்குத்தொடுவாய் மன்னாரிப் பகுதிகளிலும் யாழ்ப்பாண ஆய்வுகூடத்தைப் பயன்படுத்தி ஆராய்ச்சி செய்திருக்கிறேன். கொழும்பில் வேலைசெய்யமுடியாத காரணத்தினால்தான் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் கேட்டேன்.

### நண்பர் கூறிய தகவல்

என் சக ஊழியரான முஸ்லிம் ஒருவர் இந்தியா செல்லும் வழியில் என்னை இங்கு வந்து சந்தித்தார். உங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். கந்தோருக்குப் போனால் கட்டாயம் அடிப்பார்கள் என்று அவர் கூறினார்.

அங்கு வேலை செய்யும் சிங்கள ஊழியர் ஒருவரின் மச்சானை, மடுவில்வைத்து கொலை செய்துவிட்டார்களென்று கூறி, அவர்கள் எனது அறையில் வந்து தேடினார்களென்றும், அந்த முஸ்லிம் நண்பர் கூறினார் அதே நேரத்தில் கடிதம் எழுதினால் பாரதூரமான விளைவு ஏற்படுமென்பதால், நேரில் வந்து சொன்னதாகவும் அவர் கூறினார்.

இனிமேல் சிங்கள நாட்டில் வேலை செய்ய விரும்பவில்லை. எங்கள் கந்தோரில் வேலை செய்த தமிழ் பெண்ணான செல்வி குமாரசாமியை அதே கந்தோரில் வேலை செய்த 15 பேர் தாக்க முயற்சித்தார்கள். அப்போது கலாநிதி குணவர்த்தன, அப்பெண்ணை, தன் காரில் பாதுகாப்பாக கூட்டிச் சென்றுவிட்டார். அப்பெண் இன்னும் வேலைக்குச் செல்லவில்லை. வைத்திய அத்தாட்சிப் பத்திரம் அனுப்பிக்கொண்டு இங்கேயே தங்கியிருக்கின்றார்.

### தமிழ் மாணவர்கள்

மட்டக்குளியில் கடற்றெழில் பயிற்சி பெற்ற 15 மாணவர்களை, சிங்களவர்கள் அடித்து வெளியே அனுப்பிவிட்டார்கள்.

எங்கள் கந்தோரில் தமிழ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக எதிர்ப்பு இருக்கிறது.

நிலைமை சீராகிவிட்டது; உடனே வேலைக்கு வரவும் என்று எனக்குக் கடிதம் வந்தது. நான் பதில் எழுதினேன், அங்கு வேலை செய்ய முடியாது யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் செய்யவும். அது முடியாவிட்டால் ஓய்வு பெற அனுமதி தருமாறு கேட்டேன். நான் 10 வருடமும் 10 மாதமும், அரச ஊழியராகஇருக்கிறேன். அரச ஊழியர் ஓய்வு பெறுவதற்கு 10 வருட சேவை தாராளமாகப்போதும். மருத்துவ அடிப்படையில் நான் ஓய்வு பெற விரும்பவில்லை. நேர்மையாகவே ஓய்வு பெற விரும்புகிறேன்.

ஓய்வு பெறவிட முடியாதென்றும் 55 வயதிலேயே ஓய்வுபெறலாம் என்றும் என் கடிதத்திற்குபதில் அனுப்பினார்கள்.

அக்டோபர், நவம்பர் மாத சம்பளங்களை நான் பெறவில்லை. இதுபற்றி நேரில் கதைக்க கொழும்பு சென்றேன்.

முதலில் போய் கந்தோரில் சக ஊழியரைச் சந்தித்தேன். ஆய்வுகூட உதவியாளர் ஒருவர் 'தமிழ் ஈழம்' எப்பவருகிறது என நக்கலாக கேட்டார்.

கமிஷனர்: அவர் சிங்கள வரா?- ஆம். உதவியாளர் 6 பேர் இருக்கிறார்கள். ஒருவரைத்தவிர மற்ற எல்லாரும் சிங்களவர்கள்.

சட்: அந்த உதவியாளர் 'தமிழ் ஈழம்' பற்றி கேட்டது உம்மை அவமதிப்பதுபோல் இருந்தது.

சச்சிதானந்தன்: என்னை மாத்திரமல்ல, இந்நாட்டில் வாழும் அத்தனை தமிழ் மக்களையும் அவமதிப்பதுபோல் இருந்தது. நான் இலாகா அதிபரிடம் எனக்கு இடமாற்றம் தருமாறு கேட்டேன்.

இந்நாட்டில் இனக்கலவரம் வெள்ளம்போல் அடிக்கடிவருமென்றும், ஆனபடியால் இதோடு வாழப் பழகிக் கொள்ளவேண்டும் என்றும் கூறினார்.

அப்படி வாழ நானும் தயாரில்லை; சிங்கள மக்களும் தயாரில்லை என்பதை அறிந்து கொண்டேன். சிங்களவர்களுக்கு நாங்கள் வேலைபார்ப்பது விருப்பமில்லை. பெரும்பாலான சிங்கள உத்தியோகத்தர்கள் அந்த உணர்வுடன்தான் இருக்கிறார்கள்.

டிசம்பர் 1ம் தேதி வேலையிலிருந்து விலக முடிவு செய்து, பதவியிலிருந்து விலகிக்கொள்கிறேன் எனக் கடிதம் எழுதினேன்.

1967 ம் ஆண்டு நான் வேலைக்குச் சேர்ந்தபோது எனக்கும் அதிபருக்கும் ஒரு ஒப்பந்தம் இருந்தது: அந்த ஒப்பந்த அடிப்படையில், அவர் வேலையிலிருந்து என்னை நீக்கவேண்டும், அல்லது நான் ஓய்வுபெற வேண்டும், அவர் என்னை நீக்கவில்லை; இடமாற்றமும் தரவில்லை. அதனால் நான் விலகுவதற்குக் கடிதம் கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டேன்.

சட்: இப்போ வீட்டிற்கு வந்திருக்கிறீர்? இனி மாமன், மாமி தயவில் வாழவேண்டும்?- இல்லை எவர் தயவிலும் நான் வாழ விரும்பவில்லை. என்னிடம் சேமிப்புப் பணம் இருக்கிறது. அத்துடன் சில பொருட்களையும் விற்று பணம் வைத்திருக்கிறேன். சுருக்கமாக வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கிறேன். (க)

---

### மாவனல்லை...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

ஓடி முஸ்லிம் வீட்டில் தஞ்சமடைந்தேன்.

அங்கு பொலிஸ் அதிபர் சந்திரசேகரா பொறுப்பாக இருந்தார். அவர் கேகாலையில் இருந்தார்.

மாவனல்லை எம். பி. திரு. பெலிகஸ்ஸை அன்று தேசியப் பேரவையிலிருந்து அங்கு வந்தார். அவருக்கு நடந்தவற்றை கூறினேன். பின் அவர்மூலம் பொலிசுக்கு வாக்குமூலமளித்தேன்.

அங்கு நடந்த மாநாட்டில் மாவனல்லை எம் பி. ஏன் கலவரத்தை உடனடியாகக்கட்டுப்பாட்டிற்கு கொண்டுவரவில்லையென எங்கள் முன்னிலையில் இன்ஸ்பெக்டர் தர்மராசாவை கேட்டார்.

அதற்கு இன்ஸ்பெக்டர், கலவரம்பற்றி பொலிஸ்அதிபர் சந்திரசேகராவிற்கு கூறினோம் அவர்எதுவும்கூறவில்லைஎன்றார் பொலிஸ் அதிபரின் உத்தரவு இல்லையென்றும் கலவரத்தை அடக்ககூடியஅளவு தோட்டாக்கள் இல்லைஎன்றும் இன்ஸ்பெக்டர் கூறினார்.

கதிரேசன் கோவிலுக்குச் சொந்தமாக 10 கடைகள் உண்டு. அவற்றில் இரண்டு கடைகளில் சிங்களவர்கள் இருக்கிறார்கள். அவ்விருகடைகளையும் குண்டர்கள் தாக்கவில்லை மாவனல்லையில் இந்து இளைஞர் சங்கம் ஒன்று உண்டு நான் யாழ்ப்பாணம் குருகுலத்தில் அங்கத்தவராக இருக்கிறேன். சம்பவம்பற்றி யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருக்கும் புகார் செய்து நஷ்டஈடு கோரியுள்ளேன்.

அப்பகுதியில்சமயப்பாகுபாடு ஏதும் இருக்கவில்லை. முஸ்லிம், சிங்கள மக்களிடையே சிறுசிறு குழப்பம் இல்லை. மாவனல்லை பொலிசில் என் முறைப்பாடு பதியப்பட்டது.

கமிஷன்: கோவில் திருப்பிக் கட்டவில்லை?- திருப்பிக்கட்டவில்லை; [ஏ]

---

## "என் மனைவியின் லுங்கியையும் எனது சாரத்தையும் உரிந்தனர்"

(5-ம் பக்கத் தொடர்ச்சி) பின் நின்றுவிட்டனர். தோட்டத்திலுள்ள தொழிலாளர் பாதுகாப்பளித்து எங்களை மறைத்து வைத்திருந்தனர். மறுநாள், கிராமத்தவர்களும், தோட்டத் தொழிலாளரும் என்னை ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர்.

நான் பங்களாவிற்குத் திரும்பிச் சென்றபோது, எல்லாம் சீர்குலைந்திருந்தது.

### இன்ஸ்பெக்டருக்கு கோழிப்பண்ணையில் கண்

இச்சம்பவம்பற்றி குருநாகல் சப் இன்ஸ்பெக்டருக்குப் புகார் செய்தேன். அவர் என் பங்களாவைப் பார்க்க வந்திருந்தார். அவருக்கு என் கோழிப் பண்ணையில் கண்ணாக இருந்தது. கோழிப்பண்ணையை 3600 ரூபாவிற்குத் தருமாறு என்னை நிர்ப்பந்தித்தார். அந்நேரம் எனக்கு வேறு வழி எதுவும் இல்லை. என் அனுமதியின்றி சப் இன்ஸ்பெக்டர் 1200 ரூபா பெறுமதியான கோழித்தீனை எடுத்துவிட்டார். பின் 1000 ரூபாவிற்கு இரு மணி ஓடர்களை அனுப்பினார்.

### உதவிப்பொலிஸ் மா அதிபர் புகாரை ஏற்கவில்லை

நான் இதுபற்றி உதவி பொலிஸ்மா அதிபருக்குப் புகார் செய்தேன். அவர் அதனைத் திருப்பி அனுப்பிவிட்டார். குருநாகல் பொலிஸாருக்குப் புகார் செய்யுமாறு அறிவித்திருந்தார்.

நான் என் பங்களாவுக்குச் சென்றுபார்ப்பதற்கு குருநாகல் உதவிப் பொலிஸ் அதிபர் பாதுகாப்பளிக்கவில்லை. மேலதிகாரிகளைத் தாஜா பண்ணும் விதத்தில் நடந்துகொண்டார். விசாரணைசெய்யாமல் எனக்கு தெரிந்தவற்றை எழுதி மேலதிகாரிக்குஅனுப்பிவிட்டார் இது பற்றி உதவிப் பொலிஸ் மா அதிபருக்குப் பல பதிவுக்கடிதங்கள் அனுப்பினேன். ஒன்றுக்கும் பதில்கிடைக்கவில்லை.

கொள்ளைத்தலைவன் பிரேமரத்ன பிரபல கேடியா இருந்தும் பொலிசார் அவனைப் பிடிக்கவில்லை அவர் வேறு வழக்கிலும் தொடர்பாக இருந்தார். விசேஷ சார்ஜன்ட் ஒருவர் நியமிக்கப்பட்டும் இதுவரை பிரேமரத்ன பிடிபடவில்லை.

நான் புகார்செய்த பின்னர் தான் சப் இன்ஸ்பெக்டர் எனக்கு 1000 ரூபா கோழித்தீனுக்காக மணிஓடர் அனுப்பினார். [க-அ]

---

### மகாசமாதி

**கந்தையா சுவாமிகள்**

[குடைச்சாமி]



கோண்டாவில், குமரகோட்டத்தைச் சேர்ந்த கந்தையா சுவாமிகள் [குடைச் சாமி] நேற்று முன்தினம் மகாசமாதி அடைந்துவிட்டார். சுவாமிஜியின் சமாதிக் கிரியைகள் இன்று [16—2—1978] வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

இடம்: இ போ. சபை கோண்டாவில் டிப்போவிற்கு எதிர் வீதியில், அரை மைல் தொலைவில் உள்ளது. 8525

---

### மரண அறிவித்தல்

**சூரியமூர்த்தி கணபதிப்பிள்ளை**

சுழிபுரத்தைச்சேர்ந்தவரும், மூன்னாள் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைப் பிரதம லிகிதரும், சுபாஸ் கபே கணக்காளருமான சூரியமூர்த்தி கணபதிப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், நவராணி, பாலசூரியகுமார் [செல்லமகால் தியேட்டர் கொழும்பு], ஏகசூரியராணி, சந்திரராணி, கோபாலசூரியகுமார், தேவசூரியகுமார் [மவுண்ட் ஹவுஸ் சிலோன் லிமிட்], இராமசூரியகுமார் [யாழ். சீசேவ் பொலிஸ்பிரிவு] ஆகியோரின் அருமைத் தந்தையும், சிவசுப்பிரமணியம் (பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி), கணேசகுமார் [சீமெந்துக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை), பத்மநாதன் (தர்பரா றேடர்ஸ் கொழும்பு) தயாபதி, சிவபாக்கியத்தின் மாமனுமாவார். ஈமக்கிரியைகள் இன்று [16-2-78 வியாழக்கிழமை மாலை நான்கு மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுத் தகனக் கிரியைகளுக்காகத் திருவடி நிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 8526

---

இப்பத்திரிகை ஈழநாடு. லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Srilanka